இறைத்தூதன்

கத்தோலிக்க வார இதழ்

"ஆயர்கள் மற்றும் ஒவ்வொரு பங்குக்குருவின் முதன்மைப் பொறுப்பு என்னவென்றால்: வழிபாட்டு விதிகளுக்கு மதிப்பளித்து, எளிமையும் கண்ணியமும் நிறைந்த வழிபாட்டைப் பாதுகாத்து ஊக்குவிப்பதாகும். இத்தகைய வழிபாடே ஒன்று, தூய்மை, கத்தோலிக்கம், திருத்தூதர் வழிவழி வருகிற திருஅவையை உலகிற்கு வெளிப்படுத்தும்," - திருத்தந்தை லியோ

கிறிஸ்தவர்கள் அனைவரும் ஒன்றிப்பைத் தேடி, ஒன்றாக அமைதியை வளர்க்க வேண்டும்

நார்வே நாட்டைச் சேர்ந்த லூத்தரன் ஆயர்களைச் சந்தித்த திருத்தந்தை 14-ஆம் லியோ, கொந்தளிப்பான இக்காலத்தில் அமைதியையும் நீதியையும் ஊக்குவிக்கக் கிறிஸ்தவர்கள் அனைவரும் இணைந்து செயல்பட வேண்டும் என்று ஊக்கப்படுத்தினார். ரோம் நகருக்குத் திருப்பயணம் மேற்கொண்ட நார்வே நாட்டின் லூத்தரன் ஆயர்கள் சிலரைத் திருத்தந்தை 14-ஆம் லியோ புதன்கிழமை சந்தித்துப் பேசினார்.

தமது உரையில், தொடக்ககாலக் கிறிஸ்தவர்கள் மற்றும் மறைசாட்சிகளோடு தொடர்புடைய புனிதத் தலங்களைப் பார்வையிடுமாறு ஆயர்களுக்குத் திருத்தந்தை அழைப்பு விடுத்தார். அந்த மறைசாட்சிகளின் வாழ்வு இன்றைக்கும் நவீன உலகக் கிறிஸ்தவர்களுக்கு ஊக்கமளிக்கும் ஒரு சான்றாக விளங்குவதாகச் சுட்டிக்காட்டினார்.

அவர்களது வாழ்வின் மாதிரி, கடவுளின் மாட்சிமைக்காகவும், நம் சகோதர சகோதரிகளின் நலனுக்காகவும் நம் உயிரையே கையளிக்க நம்மை ஊக்குவிக்கிறது என்று அவர் கூறினார். இன்றைய உலகின் மிகவும் கொந்தளிப்பான இக்காலக்கட்டத்தில் நாம் எதிர்கொள்ளும் கழனமான சவால்களைத் திருத்தந்தை லியோ சுட்டிக்காட்டினார்.

"நாடுகளிடையே பகைமை அதிகரித்து வருவதைக் காணமுடிகிறது. இது பன்னாட்டு மோதல்களிலும் தகராறுகளிலும் மட்டுமல்ல, தனிப்பட்ட நாடுகளுக்குள்ளும் வெளிப்படுகிறது. அரசியல் மற்றும் சமூக உரையாடல்களில் அழக்கழ காணப்படும் கசப்புணர்வே இதற்குச் சான்றாகும்," என்று அவர் கூறினார்.

நாம் முரண்படும் நபர்களிடம் பகைமைப் போக்கைக் காட்டுவதற்கான சோதனை கிறிஸ்தவர்களுக்கும் வருகிறது. இருப்பினும், அதற்குப் பதிலாக நாம் நல்லிணக்கம் மற்றும் சகோதரத்துவத்தின் வழிகளைத் தேட வேண்டும். இயேசு நமக்கு வேறொரு வழியைக் காட்டுகிறார்; நன்மையும் அன்பும் பிறரின் ஆயுதங்களைக் கீழே போட வைக்கும் வல்லமை கொண்டவை என்பதை அவர் வெளிப்படுத்துகிறார் என்றும் அவர் கூறினார்.

ரோம் நகருக்கு வருகை தந்ததன் மூலம், இந்த லூத்தரன் ஆயர்கள் ஒன்றிப்பைக் கட்டியெழுப்பத் தங்களுக்கிருக்கும் விருப்பத்தை வெளிப்படுத்துகிறார்கள் என்று குறிப்பிட்ட திருத்தந்தை, சிறிய நற்செயல்கள் கூட நல்லிணக்கத்தின் பாதையில் நம்மை ஊக்குவித்து வழிநடத்த முடியும். பின்னர், உலக மக்கள் அனைவரும் நம்பும் பொருட்டு தம் சீடர்கள் அனைவரும் ஒன்றாக இருக்க வேண்டும் என்று இயேசு ஏறெடுத்த ஜெபத்தைத் திருத்தந்தை நினைவுகூர்ந்தார்.

"நம்மிடையே இருக்கும் பொதுவான திருமுழுக்கு மற்றும் உலகில் நாம் பகிர்ந்து கொள்ளும் பணியின் அழப்படையில், அமைதியையும் நீதியையும் ஊக்குவிக்கும் நம்முடைய பணியில் நாம் எப்போதும் ஒன்றாக இணைந்து வளர வேண்டுமென்று நான் ஜெபிக்கிறேன்," என்று அவர் கூறினார்.

நிறைவாக, அன்பின் மாற்றும் வல்லமைக்குச் சான்றாகத் திகழும் தொடக்ககால மறைசாட்சிகள் மற்றும் புனிதர்களின் மாதிரியை நோக்கி நோக்குமாறு நார்வே லூத்தரன் ஆயர்களுக்குத் திருத்தந்தை அழைப்பு விடுத்தார்.

"கடவுளின் ஆசீர்வாதத்தை நாம் கேட்போம்; கடவுளது அளவற்ற நன்மையிலும் ஞானத்திலும், நாம் இன்னும் உண்மையான சகோதர சகோதரிகளாக வாழவும், நம் மீட்பராகிய நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவுக்கு ஒன்றாக இணைந்து சாட்சியம் அளிக்கவும் அவர் நமக்கு உதவுவாராக," என்று கூறி திருத்தந்தை உரையை நிறைவு செய்தார்.

தமிழாக்கம் ஹெரால்டு



வழிபாட்டில் தீவிரமாகப் பங்கேற்பது நம்மை இறைவனோடு உறவுபடுத்தும்



இரண்டாம் வத்திக்கான் சங்கத் தந்தையர்கள் வழிபாட்டு முறை சீர்திருத்தத்தை ஊக்குவித்ததன் முக்கியத்துவத்தைப் பற்றி ஆகஸ்ட் 26 புதன்கிழமை நடைபெற்ற பொது மறைக்கல்வி உரையில், திருத்தந்தை 14-ஆம் லியோ 1963-ஆம் ஆண்டின் 'சாக்ரோசங்க்தும் கான்சிலியம்' (Sacrosanctum Concilium) என்ற புனித வழிபாட்டுமுறை பற்றிய அறிக்கையை மையமாகக் கொண்டு உரையாற்றினார்.

புனித பேதுரு பேரலயத்தில் நடைபெற்ற புதன்கிழமை பொது மறைக்கல்வி உரையின் போது, இரண்டாம் வத்திக்கான் சங்கத்தால் கொண்டுவரப்பட்ட வழிபாட்டு முறை சீர்திருத்தத்தின் முக்கியத்துவத்தைத் திருத்தந்தை 14-ஆம் லியோ சுட்டிக்காட்டினார். இச்சீர்அமைப்பு இறைமக்கள் வழிபாட்டில் அதிக விழிப்புடனும் தீவிரமாகவும் பங்கேற்கவும், இறைவனோடு ஆழமான உறவில் இணையவும் ஊக்கமளிக்கிறது என்று கூறினார்.

"திருஅவையின் வழிபாட்டுச் சடங்குகள் வழியாய், நம் மீட்பின் மறைபொருள் நினைவுகூரப்படும் வேளையில், மீட்பளிக்கும் அந்த நிகழ்வோடு நாம் நேரடியாகத் தொடர்புகொண்டு, இறைவனோடு உண்மையான ஒரு நெருங்கிய உறவை அனுபவிக்கும் வாய்ப்பு நமக்குக் கிடைக்கிறது," என்று திருத்தந்தை கூறினார்.

மேலும், "புனித வழிபாட்டின் ஒவ்வொரு வார்த்தைகளும் சைகைகளும் இந்த அனுபவத்தை நாம் பெற மிகவும் முக்கியமானவை. எனவே, வழிபாட்டில் இறைமக்களின் பங்கேற்பு வெறுமனே வேடிக்கை பார்ப்பதாக (செயலற்றதாக) இருக்கக்கூடாது," என்று அவர் வலியுறுத்தினார்.

இரண்டாம் வத்திக்கான் சங்கத்தில் முதன்முதலில் அதிகாரப்பூர்வமாக வெளியிடப்பட்ட உரை 'சாக்ரோசங்க்தும் கான்சிலியம்' ஆகும். இது திருப்பலியை மக்களின் தாய்மொழிகளிலேயே கொண்டாட வழிவகுத்தது மற்றும் இறைமக்கள் வழிபாட்டில் முழுமையாகப் பங்கேற்பதை ஊக்குவித்தது போன்ற மிக முக்கியமான மாற்றங்களைக் திருஅவைக்குக் கொண்டு வந்தது.

இந்தச் சீர்திருத்த ஆசை திடீரென உருவானது அல்ல என்றும், 20-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்தே திருத்தந்தையர்களின் செயல்பாடுகள் மற்றும் ஆவணங்கள் வழியாக இது படிப்படியாக வெளிப்பட்டு வந்தது என்றும் திருத்தந்தை லியோ குறிப்பிட்டார்.

வழிபாட்டைப் பாதுகாக்கும் ஆயர்கள் மற்றும் குருக்களின் பொறுப்பு

"வழிபாட்டு நிகழ்வுகள் என்பவை யாரோ ஒரு தனிநபரின் சொந்த நிகழ்வுகள் அல்ல. மாறாக, அவை ஆயர்களின் தலைமையில் ஒன்றிணைந்து ஒழுங்கமைக்கப்பட்ட புனித மக்களாகிய, 'ஒன்றிப்பின் அருளடையாளமான' திருஅவையின் பொதுக் கொண்டாட்டங்கள் ஆகும்."

எனவே, "ஆயர்கள் மற்றும் ஒவ்வொரு பங்குக்குருவின் முதன்மைப் பொறுப்பு என்னவென்றால்: வழிபாட்டு விதிகளுக்கு மதிப்பளித்து, எளிமையும் கண்ணியமும் நிறைந்த வழிபாட்டைப் பாதுகாத்து ஊக்குவிப்பதாகும். இத்தகைய வழிபாடே ஒன்று, தூய்மை, கத்தோலிக்கம், திருத்தூதர் வழிவழி வருகிற திருஅவையை உலகிற்கு வெளிப்படுத்தும்," என்று திருத்தந்தை கூறினார்.

"இத்தகைய வழிபாடு நற்செய்தி அறிவிப்பிற்கும் ஒரு முக்கியக் கருவியாக அமையும். இந்த அருளின் கருவி வழியாகவே - சங்கம் கற்பிப்பது போல - நாம் நம்மையே இறைவனுக்குக் கையளிக்கக் கற்றுக்கொள்கிறோம்; கிறிஸ்து வழியாய் இறைவனுடனும் நமக்குள்ளும் ஒன்றிப்பில் முழுமை பெறுகிறோம்," என்று திருத்தந்தை நிறைவு செய்தார்.

தமிழாக்கம் ஹெரால்டு

"ஒருவருக்கொருவர் அன்பு செலுத்துவதைத் தவிர, எவருக்கும் எதிலும் கடன்படாதீர்கள்."

எசேக்கியேல் 33:7-9;
உரோமையர் 13:8-10; மத்தேயு 18: 15-20

இன்றைய இரண்டாம் வாசகத்தில் திருத்தூதர் பவுல் "கடன்" என்ற வார்த்தையைப் பயன்படுத்துகிறார். ஆனால், அன்பை யாராவது ஒரு கடனாக நினைத்துப் பார்த்ததுண்டா? அன்பு செலுத்துவது நமது விருப்பம் மட்டுமே, அது கட்டாயக் கடமை அல்ல என்று நினைத்து வாழ்ந்தால், நாம் கடவுளின் ஆட்சியை விட்டு வெகு தூரத்தில் உள்ள எல்லைப் பகுதியில் வாழ்கிறோம் என்று பொருள்படும். ஒருவருக்கொருவர் அன்பு செலுத்த வேண்டிய 'கடமை' நமக்கு இருக்கிறது என்பதே திருத்தூதர் பவுலின் கூற்று.

இறைவாக்கினர் எசேக்கியேல், கடவுளிடமிருந்து தாம் கேட்டவற்றைத் தம் மக்களுக்கு அறிவிப்பதன் மூலம், அவர்கள் மீது அன்பு செலுத்த வேண்டும் என்ற கட்டளையாகவே அதைப் பார்த்தார். கடவுள் அவரிடம், "நான் சொல்வதையெல்லாம் நீ கவனமாகக் கேட்டு, மக்கள் நடக்கும் வழியைப் பற்றி நான் என்ன நினைக்கிறேன் என்பதை அவர்களிடம் அப்படியே சொல்ல வேண்டும். ஆம், எச்சரிக்கையாக இரு! நான் இந்த உலகத்தை எப்படிப் பார்க்கிறேன், மக்களிடம் நான் என்ன எதிர்பார்க்கிறேன் என்பதை நீ அவர்களுக்குக் விளக்கிச் சொல்லாவிட்டால், அவர்களுக்கு இடையே நடக்கும் எல்லாத் தவறுகளுக்கும் நீயே பொறுப்பாவாய்" என்று விளக்கினார். அதாவது, எல்லார் மீதும், குறிப்பாகச் சமுதாயத்திற்குத் தீங்கு விளைவிப்பவர்கள் மீதும் அன்பு காட்டுமாறு கடவுள் எசேக்கியேலுக்குக் கட்டளையிட்டார்.

எசேக்கியேல் ஒரு தொடக்கக்கால இறைவாக்கினராக இருந்தபோது, அவரது பணி எவ்வளவு கழனமானது என்பதைப் பற்றித் தெளிவுபடுத்திய கடவுள், அவரைப் பிழவாதமும் முரட்டுத்தனமும் கொண்ட கிளர்ச்சியாளர்களிடம் அனுப்பினார்: "அஞ்சாதே... நீ முட்களின் நடுவே வாழ்ந்தாலும், தேள்கள் மீது அமர்ந்திருந்தாலும் பயப்படாதே" (எசேக்கியேல் 2) என்றார்.

மக்கள் எங்கே தவறு செய்கிறார்கள் என்பதை உணர்த்தி, எல்லார் மீதும் அன்பு செலுத்தும் பணியைக் கடவுள் எசேக்கியேலுக்கு அளித்தார். கடவுள் அவரைச் சமுதாயத்தைக் கண்காணிக்கும் ஒரு 'காவலராக' (Watchman) நியமித்தார்; தண்டனை கொடுக்கும் போலீஸாக அல்ல, மாறாக மக்கள் தங்களையே அழித்துக் கொள்ளாமல் அவர்களைப் பாதுகாக்கும் ஒரு காவலராக நியமித்தார்.

நற்செய்தியில், இயேசு மன்னிப்பைப் பற்றிப் பேசும்போது, அதை வெறும் குற்ற மன்னிப்பாக மட்டும் பார்க்காமல், ஒரு 'முக்கியப் பணியாகவே' (Mission) பார்க்கிறார். இயேசுவைப் பொறுத்தவரை, மன்னித்தல் எனும் பணி, அவர் தம் பணியைத் தொடங்கியது போல வழி தவறித் தொலைந்துபோனவர்களைத் தேடிச் சென்று அடைவதிலிருந்தே தொடங்குகிறது.

இயேசுவின் கூற்றுப்படி, சமுதாயத்தைச் சேர்ந்த ஒருவர் தவறு செய்யும்போது - அது ஒரு தனிநபரையோ அல்லது ஒட்டுமொத்தச் சமுதாயத்தையோ பாதித்தாலும், ஒரு சீடர் அந்த நபரை ஒரு நண்பராக, அல்லது உணவு அருந்தும் தோழராகத் தேடிச் செல்லப் பணிக்கப்படுகிறார். தவறு செய்தவரிடம் செல்வதன் முழு நோக்கமே, அவரை மீண்டும் நல்வழிப்படுத்தி விண்ணரசுக்கு ஏற்புடைவராக்க வேண்டும் என்பதற்காகத்தான்.

இயேசு ஏழைகள் மற்றும் எளியோர் மீது சிறப்பு அன்பு கொண்டிருந்தார்; அதேபோல் தம் சீடர்களும் அவர்களைப் போல எளிமையாக இருக்க வேண்டும் என்று எதிர்பார்த்தார். இந்தப் போதனையில், சீடர்களை வீரமிக்கப் பெருந்தன்மைக்கு அவர் அழைக்கிறார். ஒருவர் உங்களைக் காயப்படுத்தினால், ஏமாற்றினால், திருடினால், உங்கள் நற்பெயரைக் கெடுத்தால் அல்லது சமுதாயத்தைக் காட்டிக்கொடுத்தால், அந்த நபரை மீண்டும் அன்பால் வென்றெடுக்க முயல்வதே நமக்களிக்கப்பட்ட அழைத்தல்.

இதுவே 'பாஸ்கா மறைபொருள்' (Paschal mystery) ஆகும். அதாவது, மற்றவர்களுக்காக நம்மையே வழங்கி, எளியவராக மாறி, தீங்கு செய்பவர்களுக்காக உழைத்து, மன்னிப்பை வழங்குவதன் மூலம் இயேசுவின் சீடராக வாழ்வோம்.

பெர்சியுஸ் ஜேம்ஸ்

ஆகவே, கிறிஸ்து இயேசுவோடு இணைந்திருப்போருக்கு இனித் தண்டனைத் தீர்ப்பே கிடையாது. உரோ 8:1

மலேசிய மறைப்பணி மாநாடு 2026 (MPC2026) குறித்த எதிர்பார்ப்புகள்

இந்த மலரில், மலேசிய மறைப்பணி மாநாடு 2026 பற்றிய தங்கள் எதிர்பார்ப்புகளையும் நம்பிக்கைகளையும் குறித்து மலேசிய ஆயர்கள் பகிர்ந்துகொள்ளும் சிந்தனைகள் உங்களது பார்வைக்கு!

கார்டினல் செபஸ்டியான் பிரான்சிஸ், பினாங்கு மறைமாவட்டம்.

MPC2026-ன் செயல்பாடுகளும் உள்ளடக்கங்களும் ஒன்பது மறைமாவட்டங்களைச் சேர்ந்த குருக்கள், துறவியர் மற்றும் பங்கெடுத்து உழைக்கும் பொதுநிலையினர் அடங்கிய ஓர் ஏற்பாட்டுக் குழுவால் தயாரிக்கப்பட்டுள்ளன. திருஅவையின் ஒருமைப்பாட்டையும், மலேசியக் கத்தோலிக்கத் திருஅவையின் ஆன்மீகத் தேவைகளையும் தற்போதைய நிலைகளையும் உறுதிசெய்யும் வகையில், தயாரிப்பின் ஒவ்வொரு கட்டமும் ஆயர்களால் பரிசீலிக்கப்பட்டு அதிகாரப்பூர்வமாக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.



இந்த பயணச் (Synodal) செயல்பாட்டில் தங்களை அர்ப்பணித்துள்ள அனைத்துப் பங்கேற்பாளர்களின் கீழ்ப்படிதல் மற்றும் உண்மையுள்ள ஆன்மீகப் பங்களிப்பிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்பது மிகவும் முக்கியமானது. முதன்மை இயக்குநரான தூய ஆவியாரே நம்மை வழிநடத்துவார். தூய ஆவியாருக்கும், நம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள இறைமக்களுக்கும் பணிவு, கீழ்ப்படிதல் மற்றும் உண்மையுள்ள மனநிலையோடு பங்கேற்பதே நமது ஒரே கடமையாகும்.

மலேசியாவில் உள்ள ஒன்பது மறைமாவட்டங்களுக்கும் இடையே உறவுகளையும், ஒற்றுமையையும், இறைத் தோழமையையும் (Communion) வலுப்படுத்துவதே MPC2026-ன் மிக முக்கியமான பணியாக இருக்க வேண்டும் என்பதே எனது ஆசையும் நம்பிக்கையுமாகும்.

பேராயர் ஜூலியன் லியோ, கோலாலம்பூர் மாமறைமாவட்டம்.

மலேசிய மறைப்பணி மாநாடு 2026, மலேசியாவில் 'திருஅவையாக வாழ்வது' என்பதன் உண்மையான அர்த்தத்தைச் சிந்தித்துப் பார்க்க இறைஅருள் நிறைந்த ஒரு தருணமாக அமையும் என நம்புகிறேன்.



ஒருவரையொருவர் ஆழமாகக் கேட்கவும், நமது மகிழ்ச்சி-துன்பங்கள் மற்றும் நம்பிக்கை-கனவுகளைப் பகிர்ந்து, வாழ்வின் பயணத்தில் ஒருவருக்கொருவர் துணையாக நிற்கக் கற்றுக்கொள்ளவும் நாம் முயல்வோம். இவ்வாறு கவனமாகக் கேட்கும் மனப்பான்மையினாலும், தூய ஆவியாரின் வழிநடத்துதலை உணர்ந்து செயல்படுவதினாலும் (discernment), மலேசியத் திருஅவையாகிய நமது இறைவாக்குக் கடமையை மறுபடியும் கண்டடையவும், தற்போதைய சவால்களுக்குப் பதிலளித்து எதிர்காலத்தை விவேகத்துடன் எதிர்கொள்வதற்கான ஆன்மீகப் பாதைகளை அடையாளம் காணவும் இறைவன் அருள்வாராக.

பேராயர் சைமன் போ, கூச்சிங் மாமறைமாவட்டம்.

செப்டம்பர் 9 முதல் 13 வரை நடைபெறவுள்ள இந்த மாநாடு, நமது வரலாற்றில் ஒரு மிக முக்கியமான முதல் முயற்சியாகும். 1963-இல் மலேசியா உருவானதிலிருந்து, தீபகற்ப மலேசியா, சபா மற்றும் சரவாக் ஆகிய பகுதிகளின் மறைமாவட்டங்கள் தங்களின் உள்ளூர் சூழ்நிலைகளுக்கு ஏற்ப சொந்த மேய்ப்புப்பணி வழிகளையும் கூட்டங்களையும் நடத்திவந்துள்ளன. ஆனால் இப்போது முதன்முறையாக, நாடு முழுவதிலும் உள்ள ஆயர்கள், குருக்கள், துறவியர் மற்றும் பொதுநிலைத் தலைவர்கள் அனைவரும் சரவாக் மண்ணில் ஒன்றாகக் கூடி, தூய ஆவியாரின் குரலுக்குச் செவிமடுத்து, இறை வழிநடத்துதலை உணர்ந்து, இணைந்து முன்னேறுவதற்கான பாதையைத் தேடவுள்ளனர். அரசியல் மாற்றங்களும் தேசியச் சிக்கல்களும் சமய உணர்வுகளையும் சமூகப் பதற்றங்களையும் அதிகரிக்கக்கூடிய இந்தக் காலகட்டத்தில், காலத்தின் அறிகுறிகளைக் கண்டறிந்து, ஒரே மலேசியத் திருஅவையாக நாம் எவ்வாறு பதிலளிக்க அழைக்கப்படுகிறோம் என்று நம்மையே கேட்டுக்கொள்ள MPC 2026 ஒரு வாய்ப்பை வழங்குகிறது.



நாம் சிபு (Sibu) நகரிலிருந்து புறப்படும்போது, ஆழமான திருஅவை தோழமையோடும், இணைந்து பயணிப்பதற்கான தெளிவான அர்ப்பணிப்போடும், நம் நாட்டில் ஒருமைப்பாடும் விசுவாசமும் கொண்ட சாட்சிகளாக வாழப் புதுப்பிக்கப்பட்ட விருப்பத்தோடும் திரும்புவோம் என நம்புகிறேன்.

பேராயர் ஜான் வோங் (கோத்தா கினபாலு மாமறைமாவட்டம்)

'MPC 2026' தீபகற்ப மலேசியா, சபா மற்றும் சரவாக் ஆகியப் பகுதிகளைச் சேர்ந்த அனைத்துக் கத்தோலிக்கர்களையும் ஒன்றிணைக்கும் ஒரு தளமாக அமையும் என்று நான் நம்புகிறேன்.

மலேசியாவில் உள்ள திருஅவை, கலாச்சாரங்கள் மற்றும் பிராந்தியங்களின் பல்வகைமையை கிறிஸ்துவில் ஒரே உடலாகக் கொண்டாடும் என்பது என் நம்பிக்கை.

பங்கேற்பாளர்கள் அனைவரும் திறந்த மனதுடன் மாநாட்டில் கலந்து கொண்டு, நமது பல்வகைமையை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றும், 'யாரும் உயர்ந்தவரும் இல்லை, யாரும் விடுபட்டுப் போவதுமில்லை' என்ற மனநிலையோடு நாம் அனைவரும் ஒன்றே என்பதை உணர்ந்து செயல்பட வேண்டும் என்றும் நம்புகிறேன்."



ஆயர் ஜோசப் ஹி (சிபு மறைமாவட்டம்)

"MPC 2026 மலேசியத் திருஅவைக்கு அருள் நிறைந்த ஒரு தருணமாக இருக்கும் என்பது என் நம்பிக்கை. அது நாம் அனைவரும் ஜெபம், இறையொன்றிப்பு மற்றும் உண்மையான கவனத்துடன் ஒருவரையொருவர் செவிமடுப்பதிலும் ஒன்றுகூடும் ஒரு காலக்கட்டமாக அமையும்; கடவுள் தம் திருஅவைக்கு ஆயத்தம் செய்யும் பாதையைக் கண்டறியத் தூய ஆவியார் நம்மை வழிநடத்த நாம் இடம் கொடுப்போம்.



நத்தானியேலைப் போல, நான் எல்லாரையும் 'வந்து பாருங்கள்' என்று அழைக்கிறேன். சிபுவிற்கு வெறும் ஒரு மாநாட்டிற்காக மட்டும் வராமல், உயிர்த்த கிறிஸ்துவைத் தனிப்பட்ட முறையில் சந்திக்கவும், அந்தச் சந்திப்பு நமது விசுவாசத்தைப் புதுப்பித்து, நமது ஒன்றிப்பை வலுப்படுத்தி, நமது மறைப்பணி ஆர்வத்தை ஆழப்படுத்தவும் அனுமதிக்க வாருங்கள்.!"

ஆயர் ரிச்சர்ட் இங் (மீரி மறைமாவட்டம்)

"மலேசிய வரலாற்றிலேயே முதன்முறையாக MPC2026 நிகழ்வை நடத்துவதற்காக மலேசியத் திருஅவையை நான் பாராட்டுகிறேன். 'சினட்' (Synod) அல்லது 'சினடாலிட்டி' (Synodality - இணைந்து பயணித்தல்) என்ற சொல், திருஅவையைப் பாதிக்கும் சிக்கல்களைப் பற்றி விவாதிக்கத் திருஅவை தலைவர்கள் கூடும் ஒரு கூட்டம் மட்டுமல்ல. மாறாக, அது ஒன்றிப்பு, செவிமடுத்தல், பகிர்வு மற்றும் நற்செய்தியைப் பறைசாற்றுதல் ஆகியவற்றால் வெளிப்படும் திருஅவையின் வாழ்வையும் பணியையும் விவரிப்பதாகும்.



இது நற்செய்திப் பணிக்காக ஒவ்வொருவரும் தொடர்ச்சியான உரையாடலிலும் கலந்தாய்விலும் பங்கேற்கக்கூடிய ஒரு திருஅவை முறைமையாகும். சினடாலிட்டி என்பது நாம் நற்செய்தி அறிவிக்க உதவும் ஒரு முக்கியக் கருவியாகும். இதில் இறைமக்கள் வெறும் பார்வையாளர்கள் அல்ல, அவர்களே இதன் முதன்மைச் செயல்பாட்டாளர்கள்."

ஆயர் கொர்னேலியஸ் பியோங் (கெனிங்காவ் மறைமாவட்டம்)

"மலேசியப் பணிக்குழு மாநாட்டின் (MPC2026) வழியாக, இறைமக்கள் திருச்சபையை ஒரு 'சாட்சியம் அளிக்கும் சமூகமாக' மேலும் ஆழமாகப் புரிந்து கொள்வார்கள் என்று நம்புகிறேன் — அந்தச் சமூகத்தில் அனைவரும் உண்மையான ஒன்றிப்பின் ஆவியை ஏற்றுக்கொண்டு, ஒருவரையொருவர் பராமரித்து, கிறிஸ்துவுக்குச் சாட்சியம் அளிப்பதில் உறுதியாய் நிலைத்திருப்பார்கள்."



ஆயர் பெர்னார்ட் பால் (மலாக்கா-ஜொகூர் மறைமாவட்டம்)



நாம் அனைவரும் கிறிஸ்துவில் கொண்டுள்ள ஒரே சாயலால் பிணைக்கப்பட்ட மக்கள். கலாச்சாரங்கள் மற்றும் இனங்களின் ஒற்றுமையை நமது வழிபாடு, நற்செயல்கள் மற்றும் ஞானத்தின் வழியாக வெளிப்படுத்த இந்த மாநாடு உதவும் என நம்புகிறேன். 'தூய ஆவியாரின் துணையோடு நம்மால் முடியும்' என்ற உணர்வோடு இறைஅரசிற்காகச் சமுதாயத்தைக் கட்டியெழுப்பும் வழியைக் காண்போம். விதைக்கவும், உணவளிக்கவும், வளர்க்கவும், அறுவடைக் காலத்தின் பலன்களைச் சேர்க்கவும், இறைவனின் மாட்சிமைக்காக அவருடைய அரசை விரிவுபடுத்தவும் நமக்குக் கொடுக்கப்பட்டுள்ள மறைப்பணியை இந்த மாநாட்டின் வழி நாம் இருளில் சுடரும் ஒளியாகத் திகழ்வோமாக!"

ஆயர் ஜூலியஸ் டி. கிட்டோம் (சந்தக்கான் மறைமாவட்டம்)

'நமது விசுவாசத்தைக் கொண்டாடவும், ஒருவரையொருவர் செவிமடுக்கவும், இறையொன்றிப்பு, பங்கேற்பு மற்றும் மறைப்பணியின் ஆவியோடு இணைந்து பயணிக்கவும்' நமக்கு வாய்ப்பளிக்கிறது. MPC2026 நம் இதயங்களில் ஓர் உண்மையான மனமாற்றத்தையும் உருமாற்றத்தையும் தூண்டும் என்றும், திருஅவையில் வெறுமனே வந்துபோகும் பார்வையாளர்களாக மட்டுமே இராமல், நம் சமுதாயத்தில் பிறரை இணைக்கும் பாலம் கட்டுபவர்களாக (Bridge-builders) மாற நமக்கு ஊக்கமளிக்கும் என்றும் நான் நம்புகிறேன்; உறுதியாகவும் நம்புகிறேன்.



பங்குச் செய்திகளை அனுப்ப அழைக்கிறோம்

உங்களின் கட்டுரைகள், கருத்துக்கள், பகிர்வுகள், பங்குச் செய்திகளை நாங்கள் பெரிதும் வரவேற்கிறோம். 400-500 சொற்களுக்குள் அமைந்த கட்டுரைகள், அவற்றுக்கான விளக்கக் குறிப்புகளுடன் (caption) கூடிய உயர் தெளிவுத்திறன் (HD) கொண்ட JPG அல்லது PNG வடிவத்திலான புகைப்படங்கள் ஆகியவற்றை அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

உங்களது கட்டுரைகளை பின்வரும் மின்னஞ்சல் முகவரிக்கு அல்லது வாட்ஸ்அப் எண்ணிற்கு அனுப்பி வைக்கலாம்:

மின்னஞ்சல்: tamil@herald.com.my வாட்ஸ்அப்: 012-5599015